# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண்.208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை- 600 106
தொலைபேசி எண் : 2363 5011 நிகரி : 2363 8282
மின்னஞ்சல் – tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண். 55/2021 நாள் 23.10.2021

காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், ராணிபேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய 9 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான மாவட்ட ஊராட்சித் தலைவர், மாவட்ட ஊராட்சித் துணைத் தலைவர், ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர், ஊராட்சி ஒன்றியக்குழுத் துணைத் தலைவர், கிராம ஊராட்சி துணைத் தலைவர் ஆகிய பதவியிடங்களை நிரப்பிட சாதாரண மறைமுகத் தேர்தல்கள் 22.10.2021 அன்று தொடர்புடைய ஊராட்சி அலுவலகங்களில் நடைபெற்றன.

9 மாவட்ட ஊராட்சித் தலைவர் பதவியிடங்களுக்கு நடைபெற்ற தேர்தலில் அனைத்து மாவட்ட ஊராட்சித் தலைவர் பதவியிடத்திலும் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றுள்ளது.

9 மாவட்ட ஊராட்சித் துணைத் தலைவர் பதவியிடங்களுக்கு நடைபெற்ற தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் 6 இடங்களிலும், இந்திய தேசிய காங்கிரஸ் 2 இடங்களிலும் விடுதலை சிறுத்தைகள் கட்சி ஒரு இடத்திலும் வெற்றி பெற்றுள்ளன.

74 ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் பதவியிடங்களுக்கு தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில், இராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி ஊராட்சி ஒன்றியத்திற்கான தலைவர் தேர்தல், தேர்தல் அறிவிப்பில் உள்ள குறைபாடு காரணமாக இரத்து செய்யப்பட்டது. எஞ்சிய 73 பதவியிடங்களுக்கு நடைபெற்ற தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் 68 இடங்களிலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு இடத்திலும், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு இடத்திலும் வெற்றி பெற்றுள்ளன. எஞ்சிய 3 பதவியிடங்களுக்கு குறைவெண் வரம்பின்மை (No Quorum) காரணமாக தேர்தல் நடைபெறவில்லை.

அதேபோன்று, 74 ஊராட்சி ஒன்றியக்குழுத் துணைத் தலைவர் பதவியிடங்களுக்கு தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில், இராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி ஊராட்சி ஒன்றியத்திற்கான துணைத் தலைவர் தேர்தல், தேர்தல் அறிவிப்பில் உள்ள குறைபாடு காரணமாக இரத்து செய்யப்பட்டது. எஞ்சிய 73 பதவியிடங்களுக்கு நடைபெற்ற தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் 62 இடங்களிலும், இந்திய தேசிய காங்கிரஸ் 3

இடங்களிலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு இடத்திலும், சுயேட்சை வேட்பாளர்கள் 2 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன. எஞ்சிய 5 பதவியிடங்களுக்கு குறைவெண் வரம்பின்மை (No Quorum) காரணமாக தேர்தல் நடைபெறவில்லை.

கோயம்புத்தூர், ஈரோடு, கரூர் மற்றும் நாமக்கல் மாவட்ட ஊராட்சித் துணைத் தலைவர் பதவியிடங்களுக்கு நடைபெற்ற மறைமுகத் தற்செயல் தேர்தலில், ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்ட ஊராட்சித் துணைத்தலைவர் பதவியிடத்தில் திராவிட முன்னேற்றக் கழகமும், கோயம்புத்தூர் மாவட்ட ஊராட்சித் துணைத்தலைவர் பதவியிடத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் வெற்றி பெற்றுள்ளன. கரூர் மாவட்ட ஊராட்சித் துணைத்தலைவர் பதவியிடத்திற்கு தேர்தல் நடைபெறவில்லை.

மேலும், மறைமுகத் தற்செயல் தேர்தல்களில் 6 ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் பதவியிடத்திற்கு நடைபெற்ற தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் 4 இடங்களிலும், இந்திய தேசிய காங்கிரஸ் ஒரு இடத்திலும் வெற்றி பெற்றுள்ளன. எஞ்சிய ஒரு பதவியிடத்திற்கு தேர்தல் நடைபெறவில்லை. 13 ஊராட்சி ஒன்றியக்குழுத் துணைத் தலைவர் பதவியிடத்திற்கு நடைபெற்ற தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் 7 இடங்களிலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு இடத்திலும், பாட்டாளி மக்கள் கட்சி ஒரு இடத்திலும், சுயேட்சை வேட்பாளர் ஒரு இடத்திலும் வெற்றி பெற்றுள்ளன. எஞ்சிய 3 பதவியிடங்களுக்கு தேர்தல் நடைபெறவில்லை.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

23/10/2021

மக்கள் தொடர்பு அலுவலர்